සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை வங்கிக்கு பயிலுநர் நீதிமன்ற எழுதுவினைஞர்களைத் தெரிவு செய்வதற்கான எழுத்துமூலப் பரீட்சையும் வேகப் பரீட்சையும் - 2016**

Written Test and Speed Test for the Selection of Trainee Court Clerks to the Bank of Ceylon - 2016

**(01) எழுத்துப் பரீட்சை**
Written Test

**இரண்டு மணித்தியாலங்கள்**
Two hours

**எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.

1. (i) 'முதனிலை நீதிமன்றங்கள்' என்றால் என்ன?
   (ii) மாவட்ட நீதிமன்றத்திற்கு மூல நியாயாதிக்கம் கொண்ட **இரு** விடயங்களைக் குறிப்பிடுக.
   (iii) மத்தியஸ்த சபைக் குழாத்தின் தவிசாளரால் எந்த **மூன்று** பிணக்குக்காரர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கவனிக்கப்படுவதில்லை?
   (iv) மத்தியஸ்த சபையால் வழங்கப்படும் சான்றிதழ்கள் யாவை?
   (v) பிணக்குகாரர் ஒருவருக்கு மத்தியஸ்த சபையால் தீர்வுக்கான நியதிகள் எப்போது வழங்கப்படும்?
   (vi) நீதிவான் நீதிமன்றமொன்றின் பணஞ்சார் நியாதிக்கம் யாது?
   (vii) இலங்கைக் குடியரசில் உயர்ந்ததும் இறுதியானதுமான பதிவேட்டு நீதிமன்றம் யாது?
   (viii) தண்டனைச் சட்டக்கோவையின் கீழான தவறுகள் எந்த **இரு** நீதிமன்றங்களில் விளங்கப்படுகின்றன?
   (ix) குடியியல் வழக்கில் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கென ஒரு கட்சிக்காரரால் எவ்வாறு ஒரு பதிவு செய்யப்பட்ட அற்றோணி நியமிக்கப்படுகின்றார்?
   (x) **இரு** வகையான குடியியல் வழக்குகள் யாவை?

*(02 × 10 = 20 புள்ளிகள்)*

2. (i) 'நிறைவேற்று எழுத்தாணை (Write of Execution)' என்பதனால் கருதப்படுவது யாது?
   (ii) ஒரு தீர்வை நிறைவேற்றல் என்பதனால் அறியப்படுவது யாது?
   (iii) கைப்பற்றுகையிலிருந்து தவிர்க்கப்பட்ட ஆதனங்கள் யாவை? *(20 புள்ளிகள்)*

3. (i) 'கட்டளை' க்கும் 'தீர்ப்பு' க்கும் இடையேயான வேறுபாடு யாது?
   (ii) தீர்ப்புத் தேதியிலிருந்து எத்தனை நாட்களுள் ஒரு மேன்முறையீடு கோப்பிடப்பட முடியும்?
   (iii) மேன்முறையீட்டு மனுவொன்றுக்கான தேவைப்பாடுகள் யாவை? *(20 புள்ளிகள்)*

4. (i) சாட்சிக்காரர்களின் நிரலொன்று எப்போது கோப்பிடப்படத் தேவைப்படுகின்றது?
   (ii) அழைப்பாணையில் குறித்துரைக்கப்பட வேண்டிய தேவைப்பாடுகள் யாவை?
   (iii) ஒரு சாட்சிக்காரரின் செலவுகளின் கொடுப்பனவுக்கு ஏற்பாடு செய்தல் அவசியமா என சிறு குறிப்பை எழுதுக. *(20 புள்ளிகள்)*

5. (i) இறுதி விருப்பாவணமொன்றை விட்டு வைக்காது இறக்கும் ஆளொருவரின் மரணச் சொத்தை நிருவகித்தல் எப்போது கட்டாயமாகின்றது?
   (ii) நிருவாகத் தத்துவப் பத்திரத்துக்காக எவர் விண்ணப்பிக்கலாம்?
   (iii) பணவகை உரிமைக் கோரிக்கை மீது நீதிமன்றத்தில் கோப்பிடுதற்கென சத்தியக் கடதாசியொன்றை வரைக. *(20 புள்ளிகள்)*

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை வங்கிக்கு பயிலுநர் நீதிமன்ற எழுதுவினைஞர்களைத் தெரிவு செய்வதற்கான எழுத்துமூலப் பரீட்சையும் வேகப் பரீட்சையும் - 2016**

Written Test and Speed Test for the Selection of Trainee Court Clerks to the Bank of Ceylon - 2016

**(02) வேகப் பரீட்சை**
Speed Test

**10 நிமிடங்கள்**
10 minutes

வேகம்: நிமிடத்திற்கு 25 சொற்கள்

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்:**

* வினாப்பத்திரத்தின் முதலாம் பக்கத்திலுள்ள பகுதி **I** ஐ பிழையின்றி தட்டச்சு செய்வது இந்தப் பரீட்சைக்காக சித்தி பெறப் **போதுமானதாகும்.**
* நேரம் மீதமிருப்பின் **மட்டும்** இரண்டாம் பக்கத்தில் தரப்பட்டுள்ள பகுதி **II** ஐ ஆரம்பத்தில் இருந்து தட்டச்சிடவும். மேலும் நேரம் மீதமிருப்பின் இரண்டாம் பக்கத்தில் உள்ள பகுதி **II** ஐ மீண்டும் ஆரம்பத்தில் இருந்து தட்டச்சிடவும்.புள்ளிகள் வழங்கும்போது அது தொடர்பாகவும் கவனத்தில் கொள்ளப்படும்.
* முதலாம் பக்கத்தில் தரப்பட்டுள்ள பகுதி **I** ஐ மீண்டும் தட்டச்சிடுவதற்கு மேலதிக புள்ளிகள் **வழங்கப்படமாட்டாது.**

## பகுதி I

நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தி உபாயத்துடன் சேர்ந்து செல்லும் விதத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சித் துறையினைத் தரமுயர்த்துவதற்கு விசேட கவனம் தேவைப்படுகின்றது. வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் போன்ற துறையினை உள்ளடக்கிய ஆற்றல் வாய்ந்ததும் இயக்க ஆற்றல் கொண்டதுமான சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறை, தொழில் நிலையை உருவாக்குதல், வருமானத்தை உருவாக்குதல், வறுமையை ஒழித்தல் என்பவற்றின்மூலம் அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு உதவுவதன் மூலம் பொருளாதாரத்தில் மிக முக்கியமானதொரு பங்கினை ஆற்றுகின்றது. எனினும், இலங்கையில் உற்பத்தி, அதேபோன்று காரணிச் சந்தைகள் என்பவற்றில் காணப்படும் தடைகளின் காரணமாகச் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சியாளர்களின் முழுமையான உள்ளார்ந்த வளத்தினை இன்னமும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

போதுமானளவு நிதியிடலைப் பெற்றுக்கொள்ள முடியாமை, போதியளவு மனித வள இயலாற்றல் இல்லாமை, மற்றும் போதுமானளவு தொழில்நுட்பவியல் இயலாற்றல் இல்லாமை என்பன சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள் துறையின் வளர்ச்சிக்கான தடைகளை மேலும் வலுப்படுத்துகின்றன. இப்பின்னணியில் இத்துறைக்கான நிதியின் கிடைப்பனவினை உறுதிப்படுத்துவதற்காக மீட்பு வழிமுறைகளை அறிமுகப்படுத்துவது இன்றியமையாததாகும். இது தொடர்பில் வியாபார அபிவிருத்திப் பணிகள் முக்கியமான வகிபாகத்தினை ஆற்ற முடியும் என்பதனால், சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளுக்கு வசதியளிக்கும் வகையில் அவற்றின் செயற்பரப்பு, தொழிற்பாடு என்பவற்றை அதிகரிப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

(நேரமிருப்பின் மறுபக்கத்தில் பகுதி **II** இல் உள்ள பந்தியையும் பொறிக்கவும்.)

### பகுதி II

படுகடனை உருவாக்காத வெளிநாட்டு முதலீடுகளின் பாய்ச்சலைக் கவரும் நோக்குடன் சாதகமான வியாபாரம் செய்யும் சூழலை உறுதிப்படுத்தும் விதத்தில் நிலையான கொள்கையைப் பேணுவது இலங்கைக்கு மிக முக்கியமானதாகும். மோதலுக்குப் பிந்திய காலப்பகுதியில் பேரண்டப் பொருளாதார அடிப்படைகளிலும் உட்கட்டமைப்பு வசதிகளிலும் மேம்பாடு காணப்பட்ட போதிலும், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை எதிர்பார்க்கப்பட்ட உயர்ந்த மட்டங்களில் கவர்வதற்கு இலங்கை தவறிவிட்டது. வலுவான மற்றும் உயர்ந்த பொருளாதார வளர்ச்சி உத்வேகத்தினைப் பேணுவதற்கும், சேமிப்பு - முதலீட்டு இடைவெளியை நிதியிடுவதற்கும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தனவாகும்.

சேமிப்பு - முதலீட்டு இடைவெளியினை நிரப்பும் வகையில் கடன்படல்கள் மற்றும் குறுங்கால முதலீடுகளினூடாக நிதியிடுவது செலவுமிக்கதாக உள்ளதுடன், நாடு வெளிநாட்டுப் பாதிப்புக்குள்ளாகும் நிலையும் அதிகரிக்கின்றது. ஆகவே, இந்த இடைவெளியினை நிதியிடுவதற்குப் படுகடனை உருவாக்காத வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை அதிகரிக்கும் தேவை காணப்படுகின்றது. மேலும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள், தொழில்நுட்பம், தொழில்முயற்சியாண்மை நடைமுறைகள், பன்னாட்டுச் சந்தை வாய்ப்புகள், அதிகரித்த தொழில்வாய்ப்பு என்பவற்றைக் கொண்டுவருகின்றன.

(நேரம் மீதமிருப்பின் இப்பக்கத்தில் உள்ள பகுதி **II** ஐ மீண்டும் ஆரம்பத்தில் இருந்து தட்டச்சிடவும்.)

***